1971 டிசம்பர் 9]

திரு. மு. சுருளிவேல் : தலைவர் அவர்களே, நாம் என்னதான் பத்திரிகை நிருபர்களை அழைத்துச் சென்றாலும், ஒருசில பத்திரிகைகள், தங்களுடைய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக, இந்த அரசாங்கத்தினுடைய திட்டங்கள் ஏழை எளியவர்களுக்குப் பயனளிக்கும் காரணத்தாலும், முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக இருக்கின்ற காரணத்தாலும், பாராட்டி எழுதத் தவறுகின்ற காரணத்தால், அத்தகைய பத்திரிகைகளின் நிருபர்களை அழைக்காமலிருக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அழைக்கும்போதே அவர்களை, 'நீங்கள் பாராட்டித்தான் தீரவேண்டும்' என்று நிபந்தனை வைத்து அழைக்க முடியாது. 'விமரிசனம் செய்யுங்கள்' என்றுதான் அழைக்க முடியும். விமரிசனம் செய்வது அவர்களுடைய உரிமை, ஆகவே, அந்த உரிமையை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். விமரிசனம் சரியா, இல்லையா என்பதை ஆராய்ந்து தீர்ப்பளிப்பது பொது மக்களுடைய உரிமை.

கள்ளப்பள்ளி ஊராட்சி

*189 வினா—*திரு. பெ. சௌந்தரபாண்டியன் :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கள்ளப்பள்ளி பஞ்சாயத்து செயல்படாமல் இருப்பது குறித்து, பஞ்சாயத்து உறுப்பினர்கள் சமீபத்தில் அரசின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை. புகார் மனு மட்டும் வந்துள்ளது.

(இ) மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : குளித்தலை வட்டம், கள்ளப்பள்ளி ஊராட்சி மன்றம் கடந்த ஆறு மாத காலமாகச் செயல்படாமல் இருப்பதுதான் உண்மை, இதை நான் அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் நன்றாக அறிவேன். பொதுமக்களின் அன்றாடத் தேவைகளுக்கான பணிகள் செய்யப்படாமலிருப்பதாக எனக்கும் அடிக்கடி புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மாற்றுத் திட்டம் ஏதாவது ஏற்பாடு செய்து அதை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஊராட்சிக் கணக்கைத் தணிக்கை செய்து, ஏற்பட்டிருந்த குறைபாடுகள் சம்பந்தமாக முழு அறிக்கை அனுப்பும்படியாக கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாவட்ட ஆட்சியாளர் உத்தர

விட்டிருக்கிறார். ஆகவே, அந்த உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கமும் மேல் நடவடிக்கை எடுக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

பொள்ளாச்சி அரசினர் மருத்துவமனை

*190 வினா—திரு. அ. ப. சண்முகசுந்தரம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி நகராட்சி மன்றம் பொள்ளாச்சி அரசினர் மருத்துவ மனைக் கட்டட நிதிக்கு நன்கொடையாக ரூபாய் ஒரு லட்சம் கொடுப்பதற்கு அரசிடம் அனுமதி கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம். 18—11—1971-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 2552-ல் அதற்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

திருக்குறள் ஆராய்ச்சி

* 191 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகத் தமிழ் மாநாட்டின் வருவாயிலிருந்து திருக்குறள் ஆய்வுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்விதம் பயன் படுத்தப்படுகிறது ?

(இ) அதிலிருந்து தனி நபருக்கும் உதவித் தொகை வழங்கப் படுகிறதா ?

(உ) ஆம் எனின், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) நமது மாநிலத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களும், மூன்று லட்ச ரூபாயைப் பயன்படுத்தித் தகுதி பெற்ற விரிவுரையாளர்களை நியமித்து ஆராய்ச்சி நடத்தி வருகின்றது.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

Sacred Hearts School at Palayamkottai

* 192 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether Sacred Hearts School, Palayamkottai, is exempted from general guidelines for selection of candidates for training; and

(b) if so, the reasons therefor?